முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 06.02.2026.அ.வ.எண். 237/2020, வா.சா.2. ஜெயந்தி, க/பெ. ரவிகுமார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) ஏற்கனவே குறுக்குவிசாரணையின் போது கேட்டதின் அடிப்படையில் வீடு கட்டியதற்கான பஞ்சாயத்தின்அனுமதி பெற்ற ப்ளூ பிரிண்ட் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் மேற்படி ப்ளூ பிரிண்ட் என்றால் சரிதான். மேற்படி ப்ளூ பிரிண்ட் **வா சா ஆ 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது . மேற்படி வா சா ஆ 12 ல் உள்ள கையெழுத்து எனது தகப்பனார் உடையது என்றால் சரிதான்.

2) வரைபடத்தில் கண்டுள்ள அளவுகளின் படிதான் வீடு கட்டி வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி வீடானது தார்சு வீடு என்றால் சரிதான். மனையின் மொத்த விஸ்தீரணம் 1539.25 சதுர அடி என்றால் சரிதான். வீடு கட்டுவதற்கான அளவு 1170 சதுர அடி என்றால் சரிதான். அதே போல் மாடிப்படிக்கு 121 சதுர அடி என்றால் சரிதான். திறந்த வெளியாக 245.25 சதுர அடி என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் அடிப்படையில் தான் எனது வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3) வரைபடத்தில் கண்டுள்ளபடி மனையிடத்தின் எல்லையை குறிக்கும் நிறங்கள் வா சா ஆ 12 ல் பச்சை நிறத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வீடுகட்டுவதற்கான இடம் என்று சிகப்பு நிறத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் RWH என்பதும் சிகப்பு நிறத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் ரோடு ஆனது மஞ்சள் நிறத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தின் அடிப்படையில் எனது வீட்டிற்கு மேல்புறம்

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தென்வடல் 36 அடியில் கிழமேலாக 2 அடி காலியிடம் இடைவெளி உள்ளது என்றால் 2 அடிக்கு கூடுதலாகவே மேற்படி இடைவெளி இருக்கும்.

4) அதே போல் வீட்டிற்கு தென்புறம் கிழமேலாக 44 க்கு 2 அடி இடைவெளி உள்ளது என்றால் சரிதான். அதே போல் வடபுறமும் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். இந்த அமைப்பு கொண்ட வீடு எந்த திசை நோக்கி உள்ளது என்றால் கிழக்கு நோக்கி உள்ளது. அதே போல் கிழபுறமும் இடைவெளி தென்வடலில் உள்ளது என்றால் சரிதான். அதை தொட்டு தென்வடல் தார் ரோடு உள்ளது என்றால் உள்ளது. வா சா ஆ 12 வரைபடத்தில் உள்ளவாறு எனது வீடு அமைந்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

5) குறிப்பாக எனது வீட்டின் மேல்புறத்தில் வரைபடத்தில் கண்டுள்ளவாறு இடைவெளி இல்லாமல் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. இடைவெளி விட்டுள்ளோம். அதை நீதிமன்றத்தில் காண்பிக்கக்கூடிய வகையில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். புகைப்படம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு தென்புறம் கிழமேலாக இடைவெளி உள்ளது என்பதை காண்பிக்க புகைப்படம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

6) வா சா ஆ 12 ன் படி வீட்டிற்கு மேபுறம் இடைவெளி விடாமல் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. அவ்வாறு இடைவெளி உள்ளது என்பதை காண்பிக்க புகைப்படம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது எனது வீட்டின் மேற்குப்பகுதியின் பின்புறம் என்றால் சரிதான். மேலும் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது எனது வீட்டின் மேற்கு பகுதியில் வடபுற எல்லை காட்டும் புகைப்படம் என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் **பி வா சா ஆ 1 (எண்ணிக்கை 2) ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7) வடபுற எல்லையில் எங்களுக்கு மேற்கொண்டும் இடம் உள்ளது. எனது தகப்பனார் இருந்த காலத்தில் இடித்த சுவற்றை எங்களுக்கு தெரியாமல் பிரதிவாதிகள் அவ்வாறு பூசிக்கொண்டனர். மேற்படி விவரங்களை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் குறிப்பிடவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் வீட்டிற்கு தென்புறம் காட்டக்கூடிய புகைப்படம் என்றால் சரிதான், அந்த புகைப்படம் **பி வா சா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே போல் தென் பகுதியில் கிழமேல் இடைவெளி உள்ளதை காட்டக்கூடிய புகைப்படம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். தற்சமயம் அவ்வாறு உள்ளது. மேற்படி புகைப்படம் **பி வா சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8) எங்களது வீட்டிற்கு மேபுறம் பிரதிவாதிகளின் வீடு அமைந்துள்ளதை காட்டக்கூடிய புகைப்படம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி வா சா ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் பிரதிவாதிகள் அவர்களது வீட்டிற்கு செல்வதற்கு பயன்படுத்தப்படும் நுழைவாயில் என்றால் சரிதான். தற்சமயம் தான் அவ்வாறு சென்று வருகிறார்கள். அந்தப் புகைப்படம் **பி வா சா ஆ 5 ஆக குறியீடு**

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

**செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது எனது வீட்டின் வடக்குப்பகுதியை காட்டக்கூடிய புகைப்படம் என்றால் சரிதான். அந்த புகைப்படம் **பி வா சா ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9) நான் தவறான சங்கதிகள் கொண்டு இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்தின் மேற்குப்பகுதியில் தென்வடல் சுவரோடு புகைப்படத்தில் கண்டுள்ளது போல் எங்கள் வீட்டின் எல்லை முடிகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எனது வீட்டை ஒட்டி தென்வடலாக உள்ள சுவரின் கிழபுறம் வரை இடம் உள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கே பொய்யான வழக்கு என்றும் அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எனது தாவாவை நிரூபிக்க கூடுதல் சாட்சியங்கள் விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஆவணங்கள் உள்ளது.

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி